VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
(Deemed to be University under section 3 of the UGC Act 1956)

VMLS
VINAYAKA MISSION'S LAW SCHOOL

# FUNDAMENTUM

சட்டம், கற்றல், தலைமைப்பண்பு

பதிப்பு 04 | செப்டம்பர் - 2025

# விநாயக மிஷன்'ஸ் சட்ட கல்லூரி

எதிர்காலத்திற்கான சட்ட பள்ளி




விநாயக நகர், ராஜிவ் காந்தி சாலை (OMR),
பையனூர், சென்னை - 603104 தமிழ்நாடு, இந்தியா

Ph: +91 73582 01234 | Email: admissions@vmls.edu.in

O.P. JINDAL GLOBAL UNIVERSITY

VMLS நிறுவனம், O.P. ஜிந்தால் குளோபல் பல்கலைக்கழகம் (மிகுந்த சிறப்புமிக்க நிறுவனம்) மற்றும் ஜிந்தால் குளோபல் சட்டப் கல்லூரியின் நிறுவனம் சார்ந்த வழிகாட்டல் ஒப்பந்தத்தின் கீழ் வழிகாட்டப்படுகிறது.

Jindal Global Law School
India's First Global Law School

# மாதாந்திரச் செய்திமடல்

VMLS
செப்டம்பர் - 2025 ✦



## இந்த மாதத்தில் நடந்த புத்தொளிகள் இங்கே

விநாயகா மிஷன்ஸ் சட்டக் கல்லூரி (VMLS) தனது கல்விக் கடமையையும் சமூகப் பொறுப்பையும் ஒருங்கிணைக்கும் தனது நோக்கத்தை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் தொடக்கத்தில் நடைபெற்ற சிறப்பான நிகழ்வுகள் மூலம் முன்னெடுத்துச் சென்றது. இந்நிகழ்வுகள் அனைத்தும் மாணவர் நலன், உலகளாவிய ஈடுபாடு மற்றும் நீதியை வாழ்வியல் மதிப்பாகக் கொண்டாடிக்கும் எங்கள் நிறுவனத்தின் அர்ப்பணிப்பைப் வெளிப்படுத்தின.

ஆகஸ்ட் மாதம் கேலிவதைக்கு எதிரான தினத்துடன் தொடங்கியது. கல்லூரி முதல்வர் முன்னவர். அனந்த் பத்மநாபன், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருடனும் இணைந்து பரிவு, மரியாதை மற்றும் பாதுகாப்பை வளாகம் முழுவதும் வளர்ப்பதற்கான உறுதிமொழியை வழிநடத்தினார். இந்த நிகழ்வானதுVMLS-இன் கேலிவதையை முற்றிலும் சகித்துக் கொள்ளத தன்மையைக் கொண்ட அணுகுமுறையையும்,கண்ணியமான சூழலில் கற்றல் செழித்து வளரும் “கேலிவதை-இல்லா” நிறுவனமாக அதன் அடையாளத்தை வலுப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் பாடத்திட்டங்களின் தொடக்க விழா நடந்தது. இது 2025–2026 புதிய மாணவர் குழுவை, புகழ்பெற்ற சட்ட வல்லுநர்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் ஊக்கமூட்டும் வழிகாட்டுதலுடன் வரவேற்ற முக்கிய நிகழ்வாகும். இந்நிகழ்வு நீதி, நேர்மை மற்றும் முழுமையான வளர்ச்சிக்கான முக்கியத்துவம், சமூக உணர்வுள்ள சட்ட நிபுணர்களை உருவாக்கும் எங்கள் பார்வையை ஆழமாக ஒலித்தது.

ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதி, VMLS-இன் உலகளாவிய மாநாட்டைப் பிரதிபலித்தது. எங்கள் மாணவர்கள் IIT மெட்ராஸில் நடைபெற்ற Global AI Leadership Summit-இல் பங்கேற்று, சட்டம், தொழில்நுட்பம் மற்றும் உடன்பாட்டுச் சிந்தனை ஆகியவற்றை ஒன்றிணைப்பது பற்றி ஆராய்ந்தனர். அதே சமயம், பேராசிரியர் நிஷாந்த் ஷேகந்த், இந்தியாவின் விளையாட்டுக் குறிக்கோள்கள் குறித்த UNESCO வட்டமேசையில் விளையாட்டு நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மை குறித்த உரையாடலில் VMLS-இன் சார்பாகப் பங்கேற்றார்.

இவற்றுடன் வளாகத்துக்குள், POSH விழிப்புணர்வு அமர்வு போன்ற நிகழ்ச்சிகள் உள்ளடக்கம் மற்றும் மாணவர்களின் பாதுகாப்புக்கான எங்கள் அர்ப்பணிப்பை வலுப்படுத்தின. ஆசிரியர் தலைமைத்துவம், 2025 தமிழ் உலகத் தமிழணங்கு மாநாட்டில் பேராசிரியர் முத்துவேலு பெற்ற விருது,

முன்னவர் டாக்டர் அனந்த் பத்மநாபன் தலைமையிலான LL.M. வெளியகப் பணிவட்டமேசை,துணை முதல்வர் திருமதி ஜர்னா ஜக்த்யானி மற்றும் உதவி பேராசிரியர் திரு. ஹர்தேஜ் சிங் கௌசர் ஆகியோரின் தேசிய மாற்று தீர்வு (ADR) மாநாட்டில் பங்கேற்பு போன்ற நிகழ்வுகளால் சிறப்பிக்கப்பட்டது.

செப்டம்பர் மாதம் திரு. சித்தார்த் ராஜா நடத்திய நவீன இந்திய நிறுவனச் சட்டம் குறித்த பயிற்சிப்பட்டறை மூலம் கல்விச்சிறப்பூட்டலுடன் தொடங்கியது. அதே நேரத்தில், உற்சாகமான ஓணம் கொண்டாட்டங்கள் வளாகத்திற்கு பண்டிகைநிறைந்த இனிய சூழலை உருவாக்கித் தந்தன.

Centre for Access to Justice மையத்தின் வெளிக்களப் பணியில், பழங்குடியினர் சமூகத்துடன் இணைந்து சமத்துவம் மற்றும் நீதியை அணுவதற்கு எங்கள் நீடித்த உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியது.

முன்னவர். சந்தரிகா சுப்பிரமணியன் வழங்கிய சர்வேதேச நிபுணத்துவம் பற்றிய சொற்பொழிவு எங்கள் கல்லூரி வளாக வாழ்க்கையை மேலும் வளப்படுத்தியது குறிப்பிடத்தக்கது; அதே நேரத்தில், Maritime Law Summit 2025 மற்றும் Centre for Maritime Law (CML) தொடக்க விழா, கல்வி மற்றும் தொழில்துறையை இணைத்து இந்தியச் சட்டக் கல்வி வரலாற்றில் புதிய கட்டமாக அமைந்தது.

VMLS தனது முதல் பட்டமளிப்பு விழாவை நடத்தியதன் மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தை எட்டியது. இந்த விழா, பட்டமளிக்கப்பட்ட மாணவர்களின் வாழ்க்கை நீதி, நேர்மை மற்றும் இரக்கத்தை நிலைநிறுத்தும் பாதையில் முன்னெடுத்தது. மேலும், மாணவர்கள் “(In) Complete Justice? The Supreme Court at 75” என்ற நூலின் வெளியீட்டு விழாவில் பங்கேற்று, நீதித்துறையின் பொறுப்புக்கூறல், செயல்பாடு மற்றும் அரசியலமைப்பு மதிப்புகள் குறித்து ஆழ்ந்த பார்வைகளைப் பெற்றனர்.

பாதுகாப்பான வளாகங்களை உருவாக்குதல் முதல் உலகளாவிய கலந்துரையாடல்களையும் சமூக ஈடுபாட்டையும் முன்னெடுத்தல் வரை, இந்நிகழ்வுகள் அனைத்தும் பாரம்பரியம், புதுமை மற்றும் சேவை ஒன்றிணையும் எதிர்கால சட்டப் பள்ளியாக VMLS-இன் உறுதியை உறுதிப்படுத்துகின்றன; VMLS அடுத்த தலைமுறை தலைவர்களை உருவாக்கும் வலிமையான தளமாக அது தொடர்ந்து விளங்குகிறது.

**தலையங்கம்**
**MOC**

### இந்த செய்திமடலில் நீங்கள் எதிர்பார்க்கலாம்:


- நாளைய வழக்கறிஞர்கள்
- கடல்சார் சட்டத்தை நிலைநிறுத்துதல்
- கண்ணியத்திற்கான உறுதிமொழி
- சட்டம் புதுமைகளை சந்திக்கிறது
- தூய்மையான விளையாட்டு, நியாயமான விளையாட்டு
- பாதுகாப்புக்கான குரல்கள்
- தமிழ் புலமைப்பரிசிலை மதித்தல்
- LL.M.க்கான பாதைகள்
- ADR எதிர்காலங்களை வடிவமைத்தல்
- கார்ப்பரேட் சட்ட லென்ஸ்
- பாரம்பரியத்தில் நல்லிணக்கம்
- வளாகத்திற்கு அப்பால் நீதி
- மத்தியஸ்தத்தில் தலைமைத்துவம்
- ஒரு புதிய மரபு தொடங்குகிறது
- உச்சநீதியின் 75 ஆண்டு ஒளிப்பாதை
- நேர்மைக் கையால் நீதி

# விநாயக மிஷன்'ஸ் சட்ட கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா





**செப்டம்பர் 13, 2025 | VMLS வளாகம்**

விநாயகா மிஷனின் சட்டப் பள்ளி (VMLS) செப்டம்பர் 13, 2025 அன்று பையனூரில் உள்ள VMCC வளாகத்தில் அதன் முதல் பட்டமளிப்பு விழாவை நடத்தி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அடியெடுத்து வைத்தது. இந்த சிறப்பான நிகழ்வில், நிறுவனத்தின் முதல் அணி மாணவர்கள் பட்டதாரிகளாக உலகிற்குள் நுழைந்து, VMLS இன் நீதி, சேவை மற்றும் பொறுப்புணர்வு பற்றிய தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் சென்ற தருணம் குறிப்பிடத்தக்கது.




தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் இணை டீன் (மாணவர் விவகாரங்கள்) டாக்டர். செண்பகவல்லியன் வரவேற்பு உரையுடன் நிகழ்வு தொடங்கியது. கல்லூரி முதல்வர் டாக்டர். அனந்த் பத்மநாபன் VMLS அறிக்கையை வழங்கினார், இது சட்டப் பள்ளியின் தொடக்கத்திலிருந்தே அதன் சாதனைகள், வளர்ச்சி மற்றும் தொலைநோக்குப் பார்வையை எடுத்துக்காட்டியது.

டாக்டர் பிரான்சிஸ் ஜூலியன் தனது சிறப்புரையில், சட்டத் தொழிலுக்கு வழிகாட்டும் கொள்கைகளான வழிகாட்டுதல், தொழில்முறை அறநெறிகள் மற்றும் சமூகப் பொறுப்புகளை வலியுறுத்தினார்.

ஓ.பி. ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகத்தின் நிறுவனத் துணைவேந்தரும் JGLS தலலவருமான டாக்டர் ராஜ்குமார் வழங்கிய செய்தி, ஒரு வலுவான கல்விப் பண்பாட்டை உருவாக்குவதில் நிறுவனம் மேற்கொண்டுவரும் ஒத்துழைப்பின் வலிமையை வலுப்படுத்தியது.

நிகழ்வின்சிறப்பம்சமாகப் பட்டச் சான்றிதழ்கள் வழங்கும் விழா, மிகுந்த கண்ணியத்துடன் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து கல்லூரி முதல்வர் டாக்டர் அனந்த் பத்மநாபன் பட்டமளிப்பு உறுதிமொழி எடுத்துரைத்தார். நாட்டுப் பண்ணுடன் நிகழ்வு இனிதாக நிறைவடைந்தது. பட்டதாரிகள், அவர்களது குடும்பங்கள், ஆசிரியர்கள் மற்றும் நிறுவனம் முழுவதற்கும் நீடித்த பெருமை, உற்சாகம் மற்றும் கொண்டாட்டத்தை இது ஏற்படுத்தியது.



இந்த விழாவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு டி. ராஜா கலந்து கொண்டு பட்டமளிப்பு நாள் உரையை வழங்கினார். அவரது ஊக்கமளிக்கும் வார்த்தைகள், பட்டதாரிகளின் மனத்தில் தொழில்முறை பயணங்களில் நேர்மை, இரக்கம் மற்றும் நீதியின் உயர்ந்த தரங்களை நிலைநிறுத்த வலியுறுத்தியது.

VMRF-DU இன் தலைமை ஆலோசகர் திரு. ஜி. சுரேஷ் சாமுவேல்; இந்திய உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் முன்னவர் ஏ. பிரான்சிஸ் ஜூலியன்; மற்றும் இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் மற்றும் Centre for Justice Through Technology-ன் வழிகாட்டுதல் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஆண்டனி ஆர். ஜூலியன் ஆகியோர் உரையாற்றினர்.

VMRF-ன் வேந்தர் முனைவர். ஏ.எஸ். கணேசன் மற்றும் துணைத் தலைவர் முன்னவர் அனுராதா கணேசன் ஆகியோரின் ஊக்கமளிக்கும் உரைகள் இந்த நிகழ்விற்கு அரவணைப்பையும் பெருமையையும் சேர்த்தன.

# விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி வளாகத்தில் கடல்சார் சட்ட மையத் தொடக்க விழா




**செப்டம்பர் 6, 2025 | VMLS வளாகம்**

விநாயகமிஷன்'ஸ் சட்டக் கல்லூரி "Charting the Course of Cargo, Contracts and Claims" என்னும் தலைப்பில் கடல்சார் சட்ட மாநாட்டைப் பெருமையுடன் நடத்தியது. உலக வணிகத்தில் 90% மேலாக இருக்கும் கடல்சார் சட்டத்தால் சட்டத்தில் இருக்கும் சவால்களையும் வாய்ப்புகளையும் வலியுறுத்தி விவாதிப்பதற்கு நீதித்துறை, கடல்சார் தொழில் புரிவோர் மற்றும் கல்வியாளர்களையும் ஒருங்கிணைத்தது.

தொடக்க விழாவில் கேரள மாநிலத்தின் உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதிபதி ஷ்யாம் குமார், VM தரு. அமர்த்துவா ராஜா மஜுந்தா (நிர்வாக பங்காளர், BOSE & Mitra & Co) ஆகியோர் பங்கேற்றனர்.



உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் மற்றும் விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியின் கடல்சார் சட்ட மையத்தின் மதிப்புறு தலைவர் டாக்டர் ஏ. பிரான்சிஸ் ஜூலியன், விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஆனந்த் பத்மநாபன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். அவர்களின் உரைகள் பன்னாட்டு வணிகத்தையும் நீதியையும் வடிவமைப்பதில் கடல்சார் சட்டத்தின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை வலியுறுத்தின.

கருத்தாளர்களின் கலந்துரையாடல்களை விமிச.கல்லூரியின் உதவிப் பேராசிரியர் பி. சரவணன் ஒருங்கிணைத்தார்.




இதில் புகழ்மிக்க வல்லுநர்கள்
கேப்டன் பங்கஜ் கபூர், வழக்கறிஞர் ஹரி நாராயணன், டாக்டர் மோகித் குப்தா, திரு. டெபாஷிஷ் முக்கர்ஜி, திரு. மித்துவா மஜுந்தா ஆகியோர் பங்கேற்றனர். இந்த அமர்வு மாணவர்களுக்கும் சட்டத் தொழில் ஆற்றுபவர்களுக்கும் சரக்கு ஒப்பந்தங்கள், கப்பல் உரிமைகள் முதலியவற்றின் மீது நுட்பக் கருத்துக்களை வழங்கியது.

விநாயகம் மிஷன் சட்டக் கல்லூரி வளாகத்தில் கடல்சார் சட்ட மையம் தொடங்கப்பட்டதாகும். ஆராய்ச்சி, கொள்கை உரையாடல், மாணவர்களுக்கு பயிற்சி ஆகியவற்றுக்கான ஒரு மையமாக செயல்படுவதையே எதிர்நோக்குகிறது. இந்த மாநாடு கல்வியாளர்களையும் தொழில் முனைவர்களையும் இணைத்து எதிர்காலத்தில் கடல்சார் வழக்கறிஞர்களை உருவாக்குவதிலும் வழிகாட்டுவதிலும் வலிமையான உறுதியைக் காட்டியது.



# ஐந்தாண்டு சட்டப் படிப்பு களுக்கான ( 2025 - 26 ) தொடக்க விழா




## ஆகஸ்ட் 18 2025 | VMLS வளாகம்

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி 2025–26 ஆம் ஐந்தாண்டுச் சட்டப் படிப்பின் தொடக்க விழாவைப் பெருமையுடன் கொண்டாடியது. விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணத்தில் இது ஒரு வரலாற்று மைல்கல்.

இந்த விழாவிற்கு மாண்புமிகு முன்னாள் நீதியரசர் சுதந்திரம் வருகை தந்து சிறப்பித்தார். நீதி மற்றும் ஒற்றுமை உணர்வு ஆகிய விழுமியங்களை எடுத்துக்கூறி, மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார்.

உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் டாக்டர் ஏ. பிரான்சிஸ் ஜூலியன், சட்டத்தை வாழ்க்கைத் தொழிலாக ஏற்க இருக்கும் மாணவர்கள் வலுவான முயற்சி, அர்ப்பணிப்பு, அறிவுசார் தேடல் ஆகியவற்றை மனத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.







பேராசிரியர்கள், தொழில் தலைவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலோடு இந்தப் புதிய அணியானது தொலைநோக்கு பார்வையுடனும் நோக்கத்துடனும் செயல்பட்டு, சட்டத் துறையில் உருவாகும் சவால்களையும் வாய்ப்புகளையும் எதிர்நோக்கத் தயாராக இருப்பார்கள். அதோடு பிறரையும் வழிநடத்தும் முன்னோடிகளாக இருப்பார்கள் என்பது உறுதி.சிறப்பு விருந்தினராக வருகை தந்த டாக்டர் சரண்யா ஜெயக்குமார், சட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மாணவர்கள் தலைமைப் பண்பு, பரிணாமம் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வானது கல்விசார் செயல்திறன், சமூகப் பொறுப்புணர்ச்சி, தொழிற்சார் சிறப்பு ஆகியவற்றுக்கான பயணத்திற்கு மாணவர்களை வரவேற்று அழைப்பதாக அமைந்தது.



## கேலிவதை எதிர்ப்பு நாள் – பாதுகாப்பும் நன்மதிப்பிற்கான உறுதிமொழி



**ஆகஸ்ட் 12, 2025 | VMLS வளாகம்**

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி, கேலிவதை எதிர்ப்பு நாளை முன்னெடுத்தது. அனைவருக்குமான நன்மதிப்பு வளாகமாக இருப்பதை மீண்டும் வலியுறுத்துவதற்கான உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்த நிகழ்வானது நமது நிறுவனம் கேலிவதையை முற்றிலும் பொறுத்துக் கொள்ளாது என்பதுடன், மாணவர் நலனுக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்தியது. கல்லூரி முதல்வர் டாக்டர் அனந்த பத்மநாபன் உறுதிமொழியை அனைவரையும் ஏற்கச் செய்தார் மாணவர்களுடன் பேராசிரியர்கள், பணியாளர்களும் சேர்ந்து பரிவு, நன்மதிப்பு, சட்டப்படியான நடத்தை ஆகியவற்றின் மரபை வளர்ப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டார்கள். கல்லூரியின் ஒட்டுமொத்த பங்களிப்பானது, வளாகம் எந்தவிதத் தூண்டுதலுக்கோ அல்லது துன்புறுத்தலுக்கோ இடமளிக்காது என்ற பொறுப்பைபா பகிர்ந்து கொள்வதை மீண்டும் வலியுறுத்தியது. இந்த நிகழ்ச்சி கற்றல் என்பது பாதுகாப்பிலும் ஒருவரை ஒருவர் மதிப்பதிலும் தான் சிறக்கும் என்பதை நினைவூட்டியது. இது விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி கேலிவதை எதிர்ப்பு நிறுவனம் என்பதை மீண்டும் வலியுறுத்தியது.

## இந்திய தொழில்நுட்ப கழகம் – Global AI Leadership Summit



**ஆகஸ்ட் 12, 2025 | VMLS வளாகம்**

இந்திய தொழில்நுட்பக் கழகம் நடத்திய உலகளாவிய செயற்கை நுண்ணறிவு கருத்தரங்கில், விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியின் 4 ஆம் ஆண்டு B.A. LL.B., B.B.A. LL.B., B.Com. LL.B. மாணவர்கள் சிறப்பாகப் பங்கேற்றார்கள் என்பதில் பெருமையடைகிறோம். நமது மாணவர்கள் சட்டத்தின் பல்வேறு பரிவுகள், தொழில்நுட்பம், அறிவியல் கோட்பாடுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் இப்பயிற்சிப் பயிலரங்கில் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள். இந்தக் கருத்தரங்கு, நமது மாணவர்களுக்குப் பன்னாட்டு செயற்கை நுண்ணறிவு தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர்களுடன் கலந்துரையாடுவதற்கு அரிய வாய்ப்பினை வழங்கியது. இது அவர்களது மேம்பட்ட பயன்பாட்டு முறையையும் சட்டத் தொழில்நுட்பத்தில் தொழில்முறை கருத்துக்களையும் புரிந்துகொள்ள உதவியது. மாணவர்களின் இந்த பங்கேற்பானது, விநாயகா மிஷன் சட்டக் கல்லூரிக்கு மாணவர்களுக்கு முழுமையான கல்வி வழங்குவதிலும், எதிர்காலத்தில் சட்டத் துறையில் நிகழவிருக்கும் வேகமான தொழில்நுட்பச் சூழலுக்குத் தங்களைத் தயார் படுத்தவும் இருக்கும் பொறுப்பை வெளிப்படுத்துகிறது.

## பேராசிரியர் நிஷாந்த் ஷேகந்த் – UNESCO Sports Law Session




**ஆகஸ்ட் 21, 2025 | இணையவழி அமர்வு**

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரிப் பேராசிரியர் நிஷாந்த் ஷேகந்த், டெல்லி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் “தூய்மையான விளையாட்டுகளின் சட்ட பரிமாணங்கள் மற்றும் என்னும்” என்ற தலைப்பில் யுனெஸ்கோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடந்த கருத்தரங்கில் இந்தியாவின் விளையாட்டுக் கொள்கைகள் பற்றிய இணையவழி சிறப்புக் கருத்தரங்கில் பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றார். கல்வியியலில் மூத்த அறிஞர்கள், கொள்கை வகுப்பவர்கள், சட்ட வல்லுநர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் ஒன்றிணைந்த இந்த அமர்வில், எதிர்காலத்தில் இந்தியாவில் தூய்மையான மற்றும் நேர்மையான விளையாட்டுகளை நடத்துவது குறித்த நோக்கத்திலும் அமைந்தது. விளையாட்டு நிருவாகத்தில் சட்டப் பரிமாணங்கள் மீது பேரா. நிஷாந்தின் பங்களிப்பு, ஒற்றுமை உணர்வின் மீது எழும் சிக்கலான பிரச்சினைகள், வெளிப்படைத் தன்மை, கொள்கை வகுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டியது. அவரது பங்கேற்பு, புதியதாக உருவாகும் சட்டங்கள் மீது தேசிய அளவிலான கலந்துரையாடல்களில் VMLS அடைந்திருக்கும் இடத்தை வெளிப்படுத்தியது. மேலும் சட்டக் கல்வியில் நம் நிறுவனம் கொண்டிருக்கும் மேம்பட்ட தலைமை பண்பிற்கான எண்ணத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

## பேராசிரியர் முத்துவேலுக்கு உலகத் தமிழணங்கு மாநாட்டில் விருது




**ஆகஸ்ட் 22, 2025**

உலகத் தமிழணங்கு மாநாடு 2025 இன் போது, சிறப்புமிக்க தமிழ்மன்ற இயற்றமிழறிஞர் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியின் நமது மதிப்புமிகு பேராசிரியர், உலகளாவிய சட்டத் தமிழ் மையத்தின் இயக்குநர், பேராசிரியர் மு. முத்துவேலுவைப் பெருமையுடன் பாராட்டுகிறோம். இந்த விருது தமிழ் மொழிபயன்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும், மேலும் அவரது சட்டப் புலமைக்கும் அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பைப் பாராட்டும் வகையில் வழங்கப்பட்டது. பேராசிரியர் முத்துவேலு உலகளாவிய நிலையில் சட்டத் தமிழ் முக்கியமான இடத்தை அடைவதற்கு ஊக்குவிக்கும் சக்தியாகத் திகழ்கிறார். அவரது தலைமையில், இந்த மையமானது தாக்கமிகு ஆய்வுகளை வளர்ப்பது, பயன்பாடுகளுக்கு இடையிலான சட்ட உரையாடல்களை மேம்படுத்துவது, மேலும் சட்டக் கல்வியின் முக்கியத் தூணாக இருக்கும் தமிழ் மரபைப் பாதுகாப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## POSH விழிப்புணர்வு அமர்வு

**ஆகஸ்ட் 22, 2025 | VMLS வளாகம்**

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி பாலியல் வன்முறை தடுப்புக் குறித்த விழிப்புணர்வு அமர்விற்கு ஏற்பாடு செய்தது. இதில் பாலியல் வன்முறைத் தடுப்புப் பயிற்சியாளர் சுதர்சன் வெங்கடாரியா கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியானது பாதுகாப்பையும் நன்மதிப்பையும் பேணி வளர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வளாகத்தில் அனைவருக்குமான சூழலை உருவாக்குவதையும் வலியுறுத்தியது. வெங்கடாரியா அவர்கள் 2013 ஆம் ஆண்டின் POSH சட்டத்தின் தெளிவான பார்வையை விளக்கினார். அச்சட்டத்தில் கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவத்தைக் காட்டி, மாணவர்கள், ஆசிரியர்களின் பொறுப்புணர்வையும் பகிர்ந்து கொண்டார். கலந்துரையாடல்கள், அவரது வாழ்க்கையிலிருந்து கூறிய எடுத்துக்காட்டுகள் மூலம் பங்கேற்றவர்கள் பாலியல் வன்முறையை எப்படித் தடுப்பது பற்றியும் உரிமைகளும் பொறுப்புகளும் பற்றிய ஆழ்ந்த புரிதலையும் பெற்றனர். இந்த அமர்வு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து வலியுறுத்தியது. மேலும் கல்விசார் மற்றும் தொழில்முறை பணிகளுக்கு இடையே ஒருவருக்கு ஒருவர் நன்மதிப்புத் தேவை என்பதை மாணவரிடம் இருந்து உறுதியான பதிலைப் பெற்றது. இந்த நிகழ்வு, விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியில் பாலியல் உணர்வெதிர்ப்பு நிலைமை மீதுள்ள அக்கறையை மீண்டும் வெளிப்படுத்தியது.






## ஓணம் பண்டிகை – மரபு, ஒற்றுமை, மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது

**செப்டம்பர் 2 2025 | VMLS வளாகம்**

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி உற்சாகம், மரபு வழிப் பெருமிதம் மற்றும் ஒற்றுமை உணர்வின் உன்னதத்துடன் ஓணம் பண்டிகையை கொண்டாடியது. இந்த நிகழ்வு கேரள மரபிற்கு மதிப்பளிக்கும் வகையில் மாணவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்களை ஒன்று இணைத்தது. ஒற்றுமை உணர்வையும், இது அனைவருக்குமான வளாகம் என்பதையும் பிரதிபலித்தது. பூ அலங்காரம் (பூக்கோலம்), மரபுவழிக் கலை நிகழ்ச்சிகள் மாணவர்களின் கைவண்ணத்தில் நடைபெற்றன. ஓணம் என்பது நன்றி உணர்வையும் ஒற்றுமை உணர்வையும் வெளிப்படுத்தும் பண்டிகை என்பதை உணர்த்தியது. இந்தக் கொண்டாட்டங்கள் மாணவர்களுக்கு இந்தியாவின் மரபில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பினை வழங்கின. இது விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி வளாகத்திற்குள் ஒரு உறுதியான பிணைப்பை வளர்த்தெடுத்தது. கல்வியியல் மேன்மையையும் கலாச்சார விழிப்புணர்வையும் வளர்ப்பதில் நிறுவனத்தின் ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது.

## LL.M. திட்டம் வெளிப்புற தொடக்க நிகழ்ச்சி

**ஆகஸ்ட் 30, 2025 | கிங்ஸ்டூப் & காசுவா, சென்னை அலுவலகம்**

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி அதன் LL.M. படிப்பினை வளாகத்திற்கு வெளியே KingsToupe & Kasuva Chennai அலுவலகத்தில் வெற்றிகரமாகத் தொடங்கியது. இந்தக் கூட்டுக் குழுக் கருத்தரங்கு, சட்டமுறைப் பயிற்சிக்கும் மேம்பட்ட கல்விசார் வாய்ப்புகளுக்கும், இளநிலை வழக்கறிஞர்கள் மற்றும் உடன் பணியாற்றுபவர்களுக்கும் தொழில்நுட்பத் திறன்களை வழங்கியது. அமர்வு பொதுநிலைச் சட்டங்கள் மீதான விவாதங்களுடன் தொடங்கியது. VMLS-இன் LL.M. இல் வழங்கப்படும் பல்வேறு பிரிவுகள் — வணிகத் தகராறுகளுக்கான தீர்வுகள், கூட்டுநிறுவனம் மற்றும் நிதி சட்டங்கள், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பச் சட்டம், குற்றவியல் சட்டங்கள் ஆகியவற்றின் மேல் பொதுவான பார்வையையும் வழங்கியது. கல்லூரி முதல்வர் டாக்டர் அனந்த் பத்மநாபனின் பங்களிப்பு முக்கியமாக இருந்தது. அவர் கல்வியியலின் கடுமையான போக்கையும் தற்போதைய சட்டத் தொழிலில் உள்ள சவால்களையும் இணைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். அவரது அறிவார்ந்த கருத்துக்கள் சட்டத் தொழிலை வடிவமைப்பதில் மேம்பட்ட கல்வியின் பங்கை வலியுறுத்தியது. பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டனர்.






## தேசிய ADR மாநாடு

**ஆகஸ்ட் 30, 2025 | ஹில்டன் ஹோட்டல், சென்னை**

விநாயகா மிஷன் பேராசிரியர்கள் ஜர்னா ஜகத்யானி (துணைத் தலைவர், தொழில் சேவைகள் மற்றும் வேலைவாய்ப்பு) மற்றும் உதவி பேராசிரியர் திரு. ஹர்தேஜ் சிங் கௌசர் ஆகியோர் “மாற்று தகராறுகள்: நடுவர் மன்றம், சமரசம், பொதுத் தீர்வு” குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கில் பங்கேற்றனர். இந்தக் கருத்தரங்கு சட்ட வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் தகராறு தீர்வு வல்லுநர்களை ஒன்றிணைத்தது. வளர்ந்து வரும் ADR பற்றிய விவாதங்களுக்கு முக்கிய அமர்வுகள் பயன்படுத்தப்பட்டன. நடுவர் மன்றம் மற்றும் சமரசத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினர். ADR கல்வியை ஊக்குவிப்பதிலும், தகராறு தீர்வுக்கான கருத்தியல் அறிவு மற்றும் நடைமுறைத் திறன்களைக் கொண்ட எதிர்கால வழக்கறிஞர்களை தயார்படுத்துவதிலும் VMLS இன் பொறுப்பை அவர்கள் பங்கேற்பு எடுத்துக்காட்டியது.

## சித்தார்த் ராஜாவுடன் நவீன இந்திய நிறுவனச் சட்டம் பற்றிய பட்டறை



**செப்டம்பர் 1 ,2025 | VMLS வளாகம்**

விநாயகா மிஷன் சட்டப் பள்ளி (VMLS) "புதிய இந்திய நிறுவனச் சட்டத்தைப் புரிந்துகொள்வது: அடிப்படைத் துறைகள்" என்ற தலைப்பில் ஒரு பயிலரங்கை நடத்தியது. இந்தப் பயிலரங்குக்கு Vertices Partners இன் மூத்த கூட்டாளியான திரு. சித்தார்த் ராஜா தலைமை தாங்கினார். கார்ப்பரேட் சட்டத்தில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள அவர், இணைப்புகள் மற்றும் கைப்பற்றுதல்கள், தனியார் பங்கு, துணிகர மூலதனம் மற்றும் கார்ப்பரேட் நிதி போன்ற துறைகளில் தனது ஆழமான அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். ஹாங்காங்கின் O'Melveny & Myers நிறுவனத்தில் தனது சர்வதேச அனுபவத்தையும், தேசிய சட்டப் பல்கலைக்கழகம் (NLSIU) மற்றும் IIM பெங்களூரில் தனது கல்விப் பங்களிப்புகளையும் பயன்படுத்தி, புதிய நிறுவனச் சட்டத்தின் வளர்ச்சி மற்றும் பயன்பாடு குறித்த தெளிவான புரிதலை மாணவர்களுக்கு வழங்கினார். இந்த உரையாடல் அமர்வு, இன்றைய வணிக மற்றும் சட்டச் சூழலில் நேரடியாகப் பொருந்தக்கூடிய நடைமுறை நுண்ணறிவுகளையும் அறிவையும் மாணவர்களுக்கு வழங்கியது.முதல்வர் டாக்டர் அனந்த் பத்மநாபன் மற்றும் பயிற்றுவிப்பாளர் சுபம் சுக்லா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இது கல்விச் சிறப்பு மற்றும் தொழில்முறை தயாரிப்புக்கான VMLS இன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டியது.

## சட்ட உதவி மையம் – பழங்குடி மக்களைச் சென்றடைதல்

**செப்டம்பர் 3, 2025 | திருவிடந்தை மற்றும் கோவளம்**

விநாயகா மிஷன் சட்டக் கல்லூரி, அதன் சட்ட உதவி மையத்தின் மூலம், திருவிடந்தை மற்றும் கோவளத்தில் வாழும் பழங்குடி சமூகத்தினருக்காக ஒரு திட்டத்தைத் தொடங்கியது. இந்த முயற்சியின் நோக்கம், குழந்தைகள் தங்கள் கல்வியைத் தொடர ஊக்குவிப்பதும், அவர்களின் படிப்பில் நிலைத்தன்மை மற்றும் ஆதரவை வழங்கும் வகையில் அவர்களுக்கு இடங்களைக் கண்டுபிடிப்பதும் ஆகும். மாணவர் தன்னார்வலர்கள் தலைமையில், பேராசிரியர் டாக்டர் சரவணன் ரவி, கல்லூரி முதல்வர் டாக்டர் அனந்த பத்மநாபனின் வழிகாட்டுதலின் கீழ், இந்தக் குழு மாற்றத்திற்கான ஒரு சக்தியாக கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் குழந்தைகளுக்கு ஒரு வருகையினை ஏற்பாடு செய்தது. தரமான கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு மட்டுமல்லாமல், விளிம்புநிலை மக்களிடையே சட்ட மற்றும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்தக் கலந்துரையாடல் ஒரு சிறந்த வாய்ப்பை வழங்கியது. இந்த மகிழ்ச்சியின் அடையாளமாக, மாணவர்களிடையே மகிழ்ச்சி, பிணைப்பு மற்றும் ஒற்றுமை உணர்வை வளர்க்கும் நோக்கத்துடன் குழந்தைகளுக்கு சுண்ணாம்புப் பலகை (கேரம் போர்டு)பரிசாக வழங்கப்பட்டது. இது ஒரு சிறிய பங்களிப்பாக இருந்தாலும், கல்விக்கும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இடையிலான ஒரு பாலத்தை உருவாக்குவதற்கான பெரிய பார்வையைப் பிரதிபலித்தது.




## டாக்டர் சந்தரிகா சுப்பிரமணியத்தின் சொற்பொழிவு






**செப்டம்பர் 5, 2025 | VMLS வளாகம்**

விநாயகா மிஷனின் சட்டப் பள்ளி (VMLS), சிட்னியில் உள்ள SUCCESS வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் முதன்மை வழக்கறிஞர் டாக்டர் சந்தரிகா சுப்பிரமணியன் பங்கேற்ற சிறப்புச் சொற்பொழிவுத் தொடரை நடத்தியது. உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர், கல்வியாளர் மற்றும் சமூகத் தலைவரான அவர்,

- "தற்போதைய சட்டங்களை குறிப்பிட்டு இந்தியாவில் மத்தியஸ்தத்திற்கான இடம் "
- "வற்புறுத்தும் தலைமைத்துவம்"

என்ற இரண்டு அமர்வுகளை வழங்கினார். NSW உச்ச நீதிமன்றம் மற்றும் ஆஸ்திரேலியா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தனது பரந்த அனுபவத்துடன், தேசிய அளவில் அங்கீகாரம் பெற்ற மத்தியஸ்தராகவும், விருது பெற்ற எழுத்தாளராகவும், டாக்டர் சுப்பிரமணியன் மத்தியஸ்தம், தலைமைத்துவம் மற்றும் சமகால சட்ட நடைமுறை பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார்.மாணவர்களுடனான உரையாடல்கள்,மாணவர்களின் நீதி, நேர்முறைகள் மற்றும் தொழில்முறை பொறுப்பு பற்றிய புரிதலை வளப்படுத்தின. இது உலகளாவிய நிபுணத்துவத்துடன் கற்பவர்களை இணைப்பதில் VMLS இன் உறுதிப்பாட்டைப் பிரதிபலித்தது.

## முழுமையான நீதி உள்ளதா?-உச்சநீதியின் 75 ஆண்டு ஒளிப்பாதை

**செப்டம்பர் 14, 2025 | இசை அகாடமி மினி ஹால், சென்னை.**

விநாயகா மிஷனின் சட்டப் பள்ளி (VMLS), "(In) Complete Justice? The Supreme Court at 75" என்ற மதிப்புமிக்க புத்தக வெளியீட்டு விழாவில் தனது மாணவர்கள் பங்கேற்றதை மகிழ்ச்சியுடன் கண்டது. இந்த நிகழ்வில், தொகுதியின் ஆசிரியாகவும் பணியாற்றிய நீதிபதி எஸ். முரளிதர் சிறப்பு உரையாற்றினார். நீதிபதி ஏ.பி. ஷா மற்றும் நீதிபதி மதன் லோகூர் உள்ளிட்ட புகழ்பெற்ற சட்ட வல்லுநர்கள், உச்ச நீதிமன்றத்தின் 75 ஆண்டுகால பயணத்தைப் பற்றிய சிந்தனையை மூத்த வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்களுடன் குழு விவாதங்களில் பகிர்ந்துகொண்டனர். இந்தப் புத்தகம் நீதித்துறையின் பொறுப்புக்கூறல், செயல்பாடு, கருத்து வேறுபாடு மற்றும் அரசியலமைப்பு மதிப்புகள் ஆகியவற்றின் கருப்பொருள்களை ஆராய்கிறது. VMLS மாணவர்களுக்கு, இந்த நிகழ்வு நீதித்துறையின் சீர்தருத்தம் மற்றும் அரசியலமைப்பு விளக்கம் குறித்த விவாதங்களுக்கு விலையமதிப்பற்ற வெளிப்பாட்டை வழங்கியது. இது ஒரு வளமான மற்றும் அர்த்தமுள்ள கல்வி அனுபவத்தை அளித்தது.





# LEGAL MAXIM

## *" Ex turpi causa non oritur actio "*

**Meaning:**

No action arises from an immoral or illegal cause.

(A person cannot bring a legal claim if it is based on their own illegal or immoral act.)

**Legislative Reference (India):**

Indian Contract Act, 1872 (Section 23): Agreements opposed to public policy or unlawful are void.

**Example:**

A person enters into a contract with another to smuggle goods. Later, one party refuses to pay the other. The wronged party goes to court. The court will dismiss the case, stating:

"You cannot seek help of law to enforce an illegal agreement."

Since the cause itself is unlawful, no action can arise from it.

**In Simple Words:**

If your claim is based on wrongdoing or illegality, the court will not help you. You cannot sue someone to enforce a contract or agreement that is immoral or against the law.

**Why It Matters:**

- Keeps the justice system free from supporting or rewarding illegal activities.
- Ensures that people cannot misuse courts to profit from their own wrongdoings.
- Protects the principle of public morality and public policy in law

**பொருள்:** சட்டவிரோதமான அல்லது ஒழுக்கக்கேடான செயலின் அடிப்படையில் எந்தவொரு சட்ட உரிமையும் உருவாகாது.

தவறான செயலில் ஈடுபட்டவர், அதிலிருந்து நீதிமன்றத்தில் நிவாரணம் கோர முடியாது.

**இந்திய அரசியல் சட்டக் குறிப்பு:** இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 (பிரிவு 23): சட்டவிரோதமான அல்லது பொது நலனுக்கு எதிரான ஒப்பந்தங்கள் செல்லாது.

**உதாரணம்:** ஒருவர் கடத்தல் செய்வதற்காக ஒப்பந்தம் செய்தால், பின்னர் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணம் கோர முடியாது. ஏனெனில், அந்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது என்பதால், அதிலிருந்து எந்தவொரு உரிமையும் உருவாகாது.

**எளிய விளக்கம்:** தவறான செயலில் அடிப்படையிலான கோரிக்கைகளை நீதிமன்றம் ஏற்காது. சட்டவிரோதமான ஒப்பந்தம் அல்லது ஒழுக்கக்கேடான நடவடிக்கையின் மூலம் யாரும் நன்மை பெற முடியாது.

**ஏன் இது முக்கியம்?**

- சட்டம் எப்போதும் நியாயத்தையும் பொது நலனையும் பாதுகாக்கிறது.
- குற்றச்செயல் அல்லது தவறான ஒப்பந்தத்தை பயன்படுத்தி ஒருவர் லாபம் அடைய முடியாத வகையில் இந்தக் கோட்பாடு செயல்படுகிறது.
- இது சமூக நெறிகளையும் நீதித்துறையின் நேர்மையையும் உறுதிப்படுத்துகிறது.

VMLS is imparting education to the marginalized students. The institution provides support to their students who can serve at the grassroot level and protect the national interest.

*Honorable Justice (Retd.) Dr. B.S. Chauhan,*

I'm delighted that the Vinayaka Mission's Law School has placed special emphasis on inclusive education, which is much needed in times of deprived opportunities. This will open a new window for a large number of young Indians.

*Honorable Justice (Retd.) S. Muralidhar*

Guided by the finest legal minds in the country, VMLS is delivering world-class education to the rural regions of Tamil Nadu, sparking a transformative movement.

*Honorable Justice (Retd.) Fakkir Mohamed Ibrahim Kalifulla*

VMLS

VINAYAKA MISSION'S LAW SCHOOL

Vinayaka Nagar, Rajiv Gandhi Salai (Old Mahabalipuram Road), Paiyanoor, Chennai- 603104 Tamil Nadu, India

admissions@vmls.edu.in

+91 73582 01234

www.vmls.edu.in